# மக்கள் மறு வாழ்வு

மலையக மக்களும் ஈழ விடுதலைப் போராட்டமும்
கட்டுரை உள்ளே...

மலர்: 4 | பங்குனி-மார்ச் 1986 | விலை 75 காசுகள் | இதழ்: 6


# தற்காப்புத் தாக்குதல்!

## அடங்கிக் கிடந்த தமிழ் தொழிலாளர் ஆர்த்தெழுந்தனர்


**இலங்கை மலையகத் தோட்டப்புறங்களில் கலவரங்கள் தொடர்ந்து நடக்கின்றன. வடக்கு-கிழக்கில் அப்பாவி மக்கள் சுட்டுக் கொல்லப்படுவது மலையகத்திலும் ஆரம்பித்திருக்கிறது. இந்த கொடுமைகளை எதிர்த்து அடங்கி ஒடுங்கிக் கிடந்த தமிழ் தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்து விட்டனர். தற்காப்புக்கு 'போரிட' தொடங்கி விட்டனர்.**

பெப்ரவரி 26-ம் தேதி 2½ வயது குழந்தையை சிங்கள பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றதைத்தொடர்ந்து விண்டுல பகுதியில் 5000க்கு மேற்பட்ட தமிழ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

விண்டுல பகுதியில் உள்ள சென்கூம்ஸ் தோட்டத்தில் (தேயிலை ஆராய்ச்சி கழகம்) இருக்கும் மூன்று இளைஞர்களை பாதுகாப்பு படையினர் கைது செய்ய சென்றுள்ளனர். அந்த இளைஞர்களில் ஒருவர் தலை மறைவாகிவிட்டார், மற்றவர்களை கைது செய்து வர தோட்டத் தொழிலாளர்கள் கல்லெறியத் தொடங்கினர், அந்த வேளையில் தொழிலாளர்மீது பாதுகாப்பு படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

அந்த சம்பவத்தில் ஜேசைய்யா ஜோசப் என்ற இரண்டரை வயது குழந்தை(சென்ட்கூம்ஸ் தோட்ட கமிட்டியைச் சேர்ந்த பிச்சைமுத்து ஜோசப் என்பவரது மகன்) துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார். 6 பேர் காயம் அடைந்துள்ளன்ர்.

இதைத் தொடர்ந்து 5000 பேருக்கு மேல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். தோட்டத்தொழிலாளர்கள் எதற்கும் தயாரான நிலைக்கு வந்து விட்டார்கள் என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



தோட்டத் தொழிலாளர்கள் பாதையில் பாறைகளைத் தள்ளி போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தியுள்ள காட்சி.

தோட்டத் தொழிலாளர்கள் எப்படி திட்டமிட்ட தாக்குதல்களை நடத்துகிறார்கள்? ஒரு ஊமைக் கட்டளைக்கு அவர்கள் கட்டுப்படுகிறார்கள். ஒரு கொடியை தூக்கினால் அல்லது மெல்லிதாக ஒரு விசில் செய் தேயிலைச் செடிகளுக்குள்ளிருந்து 200, 300 பேர் தலை தூக்கி எழுகிறார்கள் என்று ஒரு பத்திரிகையாளர் எழுதுகிறார்,

மேலும் அவர் எழுதுகிறார்-

''தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளத் தயாராகி விட்டார்கள். அதற்கு அற்புதமாக திட்டமிட்டிருக்கிறார்கள்' என்று.

இவர்களின் புதிய வேகத்திற்கும் தாக்குதலுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதன் தலைவர் தொண்டமானே காரணம் என்று சிங்களவர் குற்றச்சாட்டியுள்ளனர்.

அவர் அதை மறுத்துள்ளார். ஆனால் சிங்களவர்களின் எந்த தாக்குதல்களிலிருந்து தங்களை காத்துக் கொள்ள தமிழ்தொழிலாளர்கள் தயாராகி விட்டார்கள் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

எப்பொழுது பார்த்தாலும் தமிழ் மக்களை சிங்களவர்கள் தாக்குவது சாதாரணக் காட்சியாகிவிட்டது. தொழிலாளர்கள் எவ்வளவுதான் குனிந்துக் கொடுப்பார்கள் என்பதை இது காட்டுகிறது. அவர்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளவும் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் தயாராகி விட்டார்கள்.

தாக்குதல்கள் ஒன்றே தம்மை தற்காத்துக் கொள்ள வழி என்று தீர்மானித்து விட்டார்கள். இப்போது சிங்களவர்களுக்கு தெரியும் இனி அவ்வளவு சுலபமாக தமிழர்களைத் தாக்க முடியாது என்று. இனி அந்த செயலையும் கைவிடுவார்கள்' என்றும் தெரிவித்திருக்கிறார்.

வெட்ட வெட்ட குட்டையாகவே இருக்கும் தேயிலைச் செடிகளோடு உறவாடும் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் 'இனி பொறுப்பதில்லை' என்று ஆர்த்தெழ ஆரம்பித்து விட்டார்கள் - தூக்கத்திலிருத்து விழித்தெழ ஆரம்பித்து விட்டார்கள்- ஊமையாக இருந்தவர்கள் பேசத் தொடங்கி விட்டனர். ஊதக் காற்று ஊதத் தொடங்கி விட்டது. O

மக்கள் மறுவாழ்வு

மலர் : 4 பங்குனி 1986 இதழ் : 6

# ஊழலே காரணம்!

தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் தென் மாநிலங்களில் குறிப்பாக தமிழ் நாட்டில் தோல்வி அடைந்திருப்பதாக மத்திய உள்துறை அமைச்சு அதிருப்தி தெரிவித்திருப்பதன் மூலம் ஒப்புக் கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணம் 90 சதவீதமானவர்களை தமிழ் நாடு ஏற்றுள்ளது என்பதும், தமிழ்நாட்டில் போதிய நிலங்கள் இல்லாமை என்பதும் அதிகப்படியானவர்களுக்கு வியாபாரக்கடன் கொடுக்கப் பட்டது என்பதும் காரணங்களாக சுட்டிக் காட்டியுள்ளது.

ஆனால் இத்திட்டத்தின் பிரதான காரணம் இவை இல்லை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

மறுவாழ்வு திட்டத்தை அமுல் படுத்துவதில் பல குறைகள் உண்டு. இந்த குறைகள் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் அளிப்பதில், பெறுவதில் முறைகேடுகளையும் இடர்பாடுகளையும் உருவாக்கியுள்ளது. இதனால் எதையும் செய்வதில் அளவிற்கு மீறிய கால தாமதம் மறுவாழ்வுத்துறை அலுவலகங்களில் லஞ்ச ஊழல்; இடைத்தரகர்களில் ஆட்சி.

வியாபாரக்கடன், வீட்டுக்கடன் பெறுவதில் இடைத்தரகர்கள் - கான்டிராக்ட்காரர்கள், குறுக்கீடாக நிற்கிறார்கள். ஐம்பதுக்கு ஐம்பது என்று கமிஷன் முறையில் இவற்றை பெற முன் நிற்கிறார்கள்; முழுமையாகவும் வழங்கப்படும் கடன் தொகையை இவர்கள் சுரண்டிவிடுகிறார்கள்.

இடைத்தரகர்களும், மறுவாழ்வுத் துறையைச் சார்ந்த பணியாளர்களும் - அதிகாரிகள் உட்பட - கைகோர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாயகம் திரும்பியோருக்காக இருக்கும் இந்த மறுவாழ்வுத்துறையில் இவர்களது நலன்களை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை என்பது வேதனைக்குரியது.

இந்த இடைத்தரகர்களை மீறி யாரும் சம்பந்தப்பட்ட அலுவலர்களையும் அணுகமுடியாது-உதவிகள் பெறமுடியாது இடைத்தரகர்கள் மூலமே காரியம் நடக்கும் என்ற நிலையில் மறுவாழ்வு அலுவலகங்கள் செயல்படுகின்றன.

இதன் காரணமாக உரியகாலங்களில் உரிய உதவி கிடைபதில்லை-குறிப்பிட்ட காலத்தில் உதவிகள் பெறவேண்டும் ஐந்தாண்டுகள் என்றால் அவருக்கு தாயகம் திரும்பியோர்களுக்குரிய,உதவிகளை முன்னுரிமைகளை பெற தகுதிஇல்லை. அதற்குள் உதவிகள் பெறாவிட்டால் அவரது மனு காலம் கடந்ததாக கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது - இதனால் பல வருடங்கள் ஆகியும் உதவிகள் பெற முடியாது பல ஆயிரம் தாயகம் திரும்பியோர் இருக்கிறார்கள் - இதுதான் தாயகம் திரும்பியோர்களுக்கு உதவிகள் அளிக்கப்படும் திட்டத்தின் தோல்விக்கு உண்மையான காரணங்கள்.

இதை மத்திய அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர வேண்டும். அதற்கேற்ப திட்டங்கள் வகுக்க வேண்டும். 0

# உள்ளாட்சித் தேர்தலில் தி·மு·க· தனிப்பெரும் வெற்றி

கடந்த 23-3-86யில் நடந்து முடிந்த தமிழ்நாட்டின் உள்ளாட்சி தேர்தல்களில் அதிகப்படியான இடத்தைப் பிடித்து திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெற்றது,

ஏழத்தாழ பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏழு முறை ஒத்திப் போட்டதற்குப் பின் இந்த தேர்தல் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 98 நகராட்சிகளும்: 382 ஊராட்சி ஒன்றியங்களும், 227 நகரப்பஞ்சாயத்துக் 12,610 கிராமப் பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிக்கான தேர்தலில் தனிப்பெரும்பான்மையாக 138 ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிகளைதிராவிட முன்னேற்றக்கழகம் கைப்பற்றியுள்ளது அ.இ.அ.தி.மு.க. 129 இடமும் கிடைத்துள்ளன. மற்றைய கட்சிகளுக்கு கிடைத்துள்ளவை: இ,காங்கிரஸ் 68, ஜனதா 3, இ.கம்யூ 6, வ.கம்யூ 7, சுயேச்சை 28 ஆகும்.

நகரப்பஞ்சாயத்து தலைவர் தேர்தலிலும் தி,மு.க. தனிப் பெருப்பான்மையான இடத்தைப் பெற்றுள்ளது. தி.மு.கவுக்கு 184, அ.இ.அ தி.மு.கவுக்கு 120 இடம். மற்றைய கட்சிகளுக்கு கிடைத்தவை: இ.காங்கிரஸ் 89 இ.கம்யூனி 23, வ.கம்யூ 11, ஜனதா 11, பா.ஜனதா 2 சுயேச்சை 181 ஆகும்.

நகராட்சித் தலைவருக்கான தேர்தலிலும் தி. மு. க. வே பெரும் பான்மையான இடத்தைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. கிடைத்துள்ள இடம் 75.

இந்த உள்ளாட்சித் தேர்தலில், ஊராட்சி உறுப்பினர்கள்; தலைவர்கள் பதவிக்கு பல தாயகம் திரும்பியோர்களும் போட்டியிட்டனர்

தாயகம் திரும்பியோர் பல கட்சித் சின்னத்திலும், சுயேச்சையாகவும் போட்டியிட்டனர்.

இந்த இதழ் பிரசுரமாகும் வரை எமக்கு கிடைத்த தகவல் படி தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரப்பஞ்சாயத்து 25 வார்டில் தி மு க. சின்னத்தில் நின்ற எம் வீ. வீரைய்யன் வெற்றி பெற்றுள்ளார்.

சென்னை திருவொற்றியூர் நகராட்சி தேர்தலில் 8வது வார்டில் நின்ற வீரகாளை (தி. மு. க) வெற்றி பெற்றுள்ளார். 500 வாக்கு வித்தியாசத்தில் இவர் வெற்றி பெற்றுள்ளார்.

காமராஜர் மாவட்டம் மல்லாங்கிணறு ஊராட்சி ஒன்றியத்தேர்தலில் அண்ணாநகர் 4வது வார்டில் திருமதி ஆர். பாக்கியம் போட்டியிட்டார்.

நீலகிரி மாவட்டம் கடலூர் வட்டம் கொளப்பள்ளி பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு திரு. பாலகிருஷ்ணன் (இந்திய கம்யூனிட் கட்சி) போட்டியிட்டார். 0

# ஒவ்வொரு ஆண்டுக்கூட்டத்திலும் வாக்குறுதி அளிக்கிறது; ஆனால் ஒரு பிரச்சனையும் தீர்க்கப்படவில்லை!

''ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் பேரவைக் கூட்டத்தில் வங்கியின் தலைவர், நிர்வாக இயக்குனர் ஆகியோர் வாக்குறுதி அளிக்கிறார்கள். ஆனால் எந்த பிரச்சனையும் தீர்க்கப்படுவதில்லை. எந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப் படுவதில்லை'' என்று தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் சார்பாளர்கள் (டெலிகேட்டுகள்) குற்றம் சாட்டினர்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதித்துவ பேரவைக் கூட்டம் 25-2-86 அன்று சென்னை ஹோட்டல் தாசப்பிரகாஷில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தமிழ்நாடு மற்றும் தென் மாநில அதிகாரிகள் கலந்துக் கொண்டதோடு மத்திய மறுவாழ்வு இயக்குனர் செல்வி எஸ். சௌஹான் இ. ஆ.ப, அவர்களும் கலந்துக் கொண்டார்.

## தலைவர் ஆண்டறிக்கை

தலைவர் யூ எஸ். நடராசன் இ. ஆ.ப அவர்கள் முதல் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார்.

''தற்போது நமது தலையாய நடவடிக்கையாக இருப்பது தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் நிதியுதவியும் ஊக்கமுமளித்து அதன் மூலம் தாயகம் திரும்பியோர் நிரந்தர வேலை வாய்ப்புபெற்று தருவதேயாகும். தாயகம் திரும்பியோர் வேலையில் அமர்த்துவதற்காக 1984 85ல் தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 158.30 லட்சம் கடன் அளித்து அதன் மூலம் 532 தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு உதவி அளித்துள்ளது.

அரசுத்துறை பொது நிறுவனங்களில் தாயகம் திரும்பியோருக்கு வேலை வாய்ப்பு வாங்கித்தர சலுகைகளுடன் கூடிய பணிகளைத் தாயகம் திரும்பியோருக்கு வரும் காலங்களில் பெற்றுத்தர இயலும் என வங்கி நம்புகிறது'' என அந்த அறிக்கை மூலம் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த சார்பாளர்கள் (டெலிகேட்டுகள்) தங்கள் பகுதியிலுள்ள பிரச்சனையும் பொது பிரச்சனைகளையும் இக்கூட்டத்தில் முன் வைத்தனர்.

## உதயணன்

(சென்னை)

மறுவாழ்வு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்; பணியாளர்கள் குறிப்பாக வங்கியைச் சார்ந்தவர்கள் தாயகம் திரும்பியோர்களை மனிதர்களாக மதிப்பதில்லை; பிச்சைக்காரர்களாக இழிசனர்களாகவும் நடத்துகிறார். இவர்களைப்பற்றி மிகத் தரக்குறைவான வார்த்தை பிரயோகிக்கிறார்கள்.

இது ரொம்ப வேதனைத்தரக் கூடியது இவர்கள் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதை அதிகாரிகள் உணர வேண்டும். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த மண்ணுக்காக தமது தியாகங்களை செய்ய முன் வந்திருக்கிறார்கள் - இரத்தமும் சிந்தியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த அதிகாரிகள் பணியாளர்கள் உணர வேண்டும்.

## சபாபதி

(சென்னை)

வங்கி நட்டத்தில் ஓடுகிற தென்றால் ஏன் தேவையற்ற செலவினங்களை ஏற்படுத்த வேண்டும்

வங்கி தீர்மானிக்கும்-செயல்படும் சில திட்டங்களை இந்த பேரவை முன்வைத்து ஒப்புதல் பெறுவதில்லை. இது முறையில்லை'. ஒவ்வொரு நடவடிக்கையும் அங்கத்தவர்களாகிய - டெலிகேட்டுகளாக எங்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். கருத்து பரிமாறவும் எங்களுக்கும் உரிமையுண்டு.

யார் யாருக்கு கடனுதவி செய்யப்படுகிறது. அப்படி கடன் பெறு நிறுவனங்களில் எவ்வளவு பேர் வேலை பெறுகிறார்கள் என்கிற விபரங்கள் டெலிகேட்டுகள் தெரிவிக்க வேண்டும்.

வேலை பெற்று இருக்கும் தாயகம் திரும்பியோர்பகுதிக்கு சென்று வரும் இயக்குனர்கள் அதிகாரிகள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க் வேண்டும்,

## ஞானப்பிரகாசம்

(சென்னை)

தொழிற் தகராறு - தொழிற் பிரச்சனை, தொழிலாளர்வெளியேற்றம் போன்ற பிரச்சனைகளை கண்டுவர தாயகம் திரும்பியோர் இயக்குனர் அனுப்பி வைக்க வேண்டும் செல்லும் போது அப்பகுதி சார்பாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

பேங்கில் இயக்குனர்களை சந்திக்கவும் - சார்பாளர்கள் வந்தால் அமரவும் உரிய ஏற்பாடுகள் - இடம் ஒதுக்கப்பட வேண்டும்.

## நிறைவேற்ற முடியும்

எப்படி தாயகம் திரும்பியோர் பிரச்சனையில் உங்களுக்கு நல்ல நோக்கங்கள் எண்ணங்கள் இருக்கிறதோ அது எங்களுக்கும் இருக்கிறது.

நீங்கள் பல பிரச்னைகளைத் தெரிவித்தீர்கள் - பல கருத்துகளை தெரிவித்தீர்கள்.

அவற்றை ஏற்று நிறைவேற்ற முடியும் என்று நினைக்கிறேன்.

-பேரவைக் கூட்டத்தில் சார்பாளர்களுக்கு பதிலளித்த மத்திய மறுவாழ்வு இயக்குனர் செல்வி எஸ். சௌஹான் இ. ஆ.ப. தெரிவித்தார்.

## லால் செல்வநாயகம்

(விழுப்புரம்)

தொழிலாளர் நலம் குறித்து அறிய விசாரணைகளுக்கு செல்லும் போது, டெலிகேட்டுகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதோடு, அவர்களும் அங்கு சமூகமளிக்க அழைப்பு விட வேண்டும்.

## சுப்பிரமணியம்

(தூத்துக்குடி)

எங்களுக்குள்ள பிரச்சனைகள் குறித்து பல கடிதங்கள் அனுப்பினோம்-தீர்த்து வைக்கப்பட வில்லை. இயக்குனர்கள் வாக்குறுதி அளிப்பதோடு சரி.

ஒவ்வொரு வருடமும் வந்து பிரச்சனைகளை சொல்கிறோம் எங்கள் வீட்டுப்பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை.

## உடையார்

(சென்னை)

தாயகம் திரும்பியோர் பல்வேறுபட்ட நிலையில் உதவிகள் பெறவும் சுயமாக இயங்கவும் தமிழ்நாடு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி'' என்ற பெயரில் ஒரு சர்வீஸ் வங்கியை அமைக்க அரசும் இந்த வங்கியும் N.O.C. வழங்க வேண்டும்.

## வீரப்பன்

(காமராஜ் மாவட்டம்)

எங்கள் பகுதியில் பலர் கடன் வாங்கிய வீடுகளை விற்று விட்டார். இந்த வீடுகளை விற்கலாமா? அப்படி விற்பதற்கு சட்டம் இடம் கொடுக்கிறதா என்பதை வங்கி விளக்க வேண்டும்.

## கதிரேசன்

(புதுக்கோட்டை)

புதுக்கோட்டை பகுதியில் கட்டப்பட்ட பல வீடுகள் பூர்த்தி பெறாமல் இருக்கின்றன.

(11-ப் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் ஆதரவை இழப்பர்

'இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளுக்கு அஞ்சி தமிழகம் வரும் அகதிகளில் பலர் சட்டத்திற்கு புறம்பான காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இப்படி ஈடுபடுவதால் தமிழக மக்களின் ஆதரவை இழப்பதோடு, இவர்கள் மத்தியில் அன்னியப் பட்டுப்போவார்கள்.'

சமீபத்தில், தொழிற்சங்க பயிற்சி மற்றும் ஆய்வுக்கான ஸ்டேட் வங்கி அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கருத்தரங்களில் மேற்கண்டகருத்தை பலர் தெரிவித்தார்கள்.

'தமிழ் அகதிகள்-ஒரு மனித பிரச்னை' என்ற பொருள் குறித்து நடந்த இக்கருத்தரங்கில், இவர்களின் பிற கஷ்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதோடு, அகதிகளில் உறவினர்களாக இருப்பவர்களை ஒரே முகாம்களிலேயே சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். அகதிகள் மத்தியில் சமூக சேவை அமைப்புகள் பணிசெய்ய அனுமதிக்கவேண்டும் என்பது போன்ற பல கருத்துகளை வலியுறுத்தினார்கள்.

இலங்கை அகதிகளுக்கு 'அகதிகள்' என்ற அந்தஸ்தை இந்திய அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த கருத்தரங்கம் வலியுறுத்தியது.

அகதிகள் சார்பில் பல பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டார்கள்.

''இலங்கை- இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற ஒப்பந்தப்படி இந்தியா வரும் தாயகம் திரும்பியோர்களையும் அகதிகளைப்போல கவனிக்க வேண்டும்'' என்று இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்ட, தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு ஆய்வு மற்றும் தகவல் மையத்தின் இயக்குனர் திரு. ஆர். ஆர். சிவலிங்கம் அவர்கள் தெரிவித்தார்கள்.

'புரோடெக்' ஒருங்கிணைப்பாளர் எஸ். சி. சந்திரஹாசன் தமிழீழ விடுதலை முன்னணியின் பிரதிநிதியாக ஈழவேந்தன் மேற்படி அலுவலகர் சங்கத்தின் துணை மண்டல செயலாளர் எஸ். சரவணமூர்த்தி மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

குமரி மாவட்டம்:

## 4வது கடனாக வழங்குங்கள்

கட்டிய வீட்டை பூர்த்தி செய்ய 4வது கடனுதவியாக ரூபா 2000 வழங்கும்படி கன்யாக்குமரியிலுள்ள தாயகம் திரும்பியோர் கோரியுள்ளனர்.

கன்னியாகுமரி - திருவனந்தபுரம் (ரயில்வே) கட்டுமான பிரிவில் பணிபுரியும் தாயகம் திரும்பியோர் 22 குடும்பங்களுக்கு பனவிளை என்ற கிராமத்தில் 5 செண்டு நிலமும் வீட்டுக் கடனுதவியும் வழங்கப்பட்டது.

3-வது கடனுதவி பெற்றும் வீடுகளை கட்டி முடிக்க முடியவில்லை பல வீடுகளுக்கு இதுவரையிலும் கூரை போட முடியவில்லை. இடையில் இவர்களுக்கு 5 மாதம் வேலையில்லாமல் போனதால் வீடுகளை பூர்த்தி செய்வது தடைபட்டது.

இதனால் தற்போது தாயகம் திரும்புவோருக்கு வழங்கப்பட்டு ரூபா 8000 கடனுதவியின்படி மிகுதி இருக்கும் ரூபா. 2000றை 4வது கடனுதவியாக கொடுக்கப் பட்டால் இவ்வீடுகளுக்கு கூரை போட்டு குடியேற முடியும் என்று தெரிவித்துள்ளனர்

இக்கடனுதவி வழங்குவதோடு, சாலை வசதி, குடிநீர் வசதி, கோவில், வாசகசாலை, மின்வசதி அமைத்துக் கொடுக்கவும் மறுவாழ்வு இயக்குனரை கோரியுள்ளனர். O

தென்னாற்காடு :

# அகதிகள் முகாமில் அம்மை நோய் பாதிப்பு

தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் முதல் சீர்காழி வரை கடலூரை மையமாகக் கொண்டு 12 அகதிகள் முகாம்கள் உள்ளன, இதில் சுமார் 370 குடும்பங்கள் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் புயல் பாதுகாப்பு இல்லங்களியே குடியமர்த்தப்பட்டுள்ளார்கள் இம் முகாம்களில் உள்ள அகதிகளுக்கு அரசு சலுகைகளைத் தவிர (ரேசன் - படிப்பணம்) வேறு உதவிகள் கிடைப்பது மிகக்குறைவு இவர்களின் முகாம்களுக்கு ஒரு சில கிறிஸ்தவ திருச்சபைகளே சில சில உதவிகளைச் செய்து வருகின்றன.

இந்த 12 முகாம்களில் அதிகமான முகாம்களில் நடைபயணமாக 3. 4 கி.மீ. தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. இங்கு வாழ் அகதிகள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு கூட நாள்தோறும் பாதயாத்திரைகள் மேற்கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு சரியான மருத்துவ வசதியின்மையால் 20 வயது யுவதி, 17 வயது இளைஞர், 7 வயது சிறுவன் 4 வயது சிறுமி ஆகியோர்கள் ஒவ்வோர் முகாமிலும் மரணமாகி உள்ளார்கள் என்பதும், இங்குள்ள அனைத்து அகதிகளும்அம்மை நோயினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்பதும் முக்கிய விடயமாகும்.

இம்முகாம் மக்கள் மல சல கூட வசதியின்றி காடுகளையே மலசலம் கழிக்க உபயோகித்து வருகிறார்கள். ஆனால் இவர்களில் அனைவர் அம்மை நோயால் பீடிக்கப் பட்டுள்ளதால் உள்ளூர் வாசிகள் தங்களின் பகுதிகளுக்கு மலசலம் கழிக்க வரக்கூடாது என்றும். அப்படி வந்தால் உள்ளூர்வாசிகளுக்கு அம்மை தொற்றி விடும் என்ற எண்ணத்திலும் இந்த அகதிகளை அந்நியப் படுத்தி வைத்துள்ளார்கள் என்பதும் ஒரு சில அறநிலை பாடசாலைகளில் அகதிகளின் குழந்தைகளை அம்மை நோய்க்கு பயந்து தனியாக வைத்து கல்வி கற்பிப்பதும் குறிப்பிடத்தக்கது O

# அகதிகளுக்கு மாணவர்கள் உதவினர்

கொட்டப்பட்டு அகதிகள் முகாமிலுள்ள அகதிகள் சிலருக்கும் வயர் கூடை பின்னி விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டதோடு கூடை பின்னுவதற்கான வயர்கள் மாணவர்கள் முயற்சியில் வழங்கப்பட்டது.

திருச்சி மறை மாவட்ட இந்திய கிறிஸ்தவ மாணவர், இந்திய மாணவர் இயக்கத்தினரால் பெற்றோர் ஆசிரியர் தினவிழா 16-2-86ம் தேதி திருச்சி ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் இலங்கைப் பிரச்சனையும் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெறும் வகையில் கண்காட்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழா மேடையிலே மேற்படி அகதிகளுக்கு வயர்கள் முதலான கொடுத்துதவினர்;

இந்த ஏற்பாடுகளை முன்னின்று கவனித்ததுடன் அகதிகளுக்கு உதவிய 'விஜயா அக்கா', இ.கி.மா, இ.மா இயக்கத்தினருக்கு அகதிகளின் பிரதிநிதிகள் தங்களின் நன்றியை தெரிவித்ததோடு, மற்ற முகாம்களிலுள்ள அகதிகளுக்கும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார், O

### தமிழகம் உட்பட தென் மாநிலங்களில் :

# தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு உதவி அளிக்கும் திட்டங்கள் தோல்வி என ம.அரசு அதிருப்தி

ஒப்பந்த அடிப்படையில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்களுக்கு தமிழ் நாடு உட்பட 4 தென் மாநிலங்களில் போடப்பட்ட மறுவாழ்வு திட்டங்கள் தோல்வியடைந்தன. எனவே எதிர்காலத்தில் தாயகம் திரும்புவோர்களை வடக்கு பிராந்தியங்களில் குடியமர்த்த முடியுமா என்பது மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக ஒரு பத்திரிகை செய்தி கூறுகிறது.

1985 நவம்பர் வரை 3 லட்சத்து 33 ஆயிரத்து 843 பேர் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா வந்துள்ளனர்; அவர்களோடு (இயற்கையின் அதிகரிப்பான) அவர்களது பிள்ளைகளும் 1 லட்சத்து 25 ஆயிரத்து 560 பேர் வந்து விட்டனர். இலங்கையிலிருந்து இன்னும் 2 லட்சத்து 61 ஆயிரம் பேர் தமது (இயற்கை அதிகரிப்பால) பிள்ளைகளோடு வரவிருக்கின்றனர்

அவர்களுக்கு தமிழகமும் மற்றும் 3 தென் மாநிலங்களும் சரியான மறுவாழ்வு அளிக்க முடியுமா? என்பது குறித்தும் மத்திய அரசு ஆராய்ந்து வருவதாக அச்செய்தி கூறுகிறது.

## தமிழ்நாட்டில் 80 சத வீதமானவர்கள்

மேலும், வியாபாரக் கடன், மலைத்தோட்டங்கள், தொழில் மற்றும் விவசாயத்திட்டத்தின் கீழ் பெரும்பாலோர் குடியமர்த்தப்பட்டார்கள். சிறு வியாபாரக்கடன், வந்தவர்களின் 80சத வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டம் மிகவும் தோல்வியடைந்தாக உள்துறை அமைச்சுக்கு கிடைத்துள்ள தகவல் என தெரிவிக்கிறது.

தொழில் வாய்ப்புத் திட்டத்தின் கீழ் குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் குடியமர்த்தப் பட்டவர்கள் நிலைமை திருப்திகரமாகவில்லை என்பது நிருபணமாகி இருக்கிறது.

## சில திட்டங்களே வெற்றியடைந்தது

மலைத்தோட்ட குடியமர்வும் ஓரளவு விவசாயத் திட்டத்தில் குடியமர்த்தப் பட்டது தான் சிறிது வெற்றி அடைந்ததாக கூறலாம். எனினும் இந்த இரு திட்டங்களிலும், மொத்த தாயகம் திரும்பியோர்கள் 8 சதவீதமானவர்களே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

80 சதவீதமானவர்களுக்கு தமிழ்நாடு புகலிடம் அளித்திருக்கிறது. தென் மாநிலங்கள் இவர்களுக்கு உரிய வாய்ப்புக்களை அளிக்க முடியாது என்பதை உள்துறை அமைச்சகம் உணர்கிறது. மிகக் குறைந்தவர்களுக்கே சிறிது வெற்றியளித்துள்ளதாக வியாபாரக் கடன் இருக்கிறது.

## மொழிப் பிரச்சனை

குறிப்பாக 90 சதவீத தாயகம் திரும்பியோர்களை ஏற்றுக் கொண்டுள்ள தமிழ் நாட்டில் போதுமான நிலம் இல்லாததும் தோல்விக்கான மிக முக்கிய காரணம் என்பதை மத்திய அரசு ஒப்புக் கொள்கிறது பிற தென்மாநிலங்கள் இவர்களுக்கு பொறுப்புகள் ஏற்றுக் கொண்டாலும் மிகக் குறிப்பிட்ட தாயகம் திரும்பியோர்களையே ஏற்றுள்ளன. இதற்கு முக்கிய காரணம் மொழிதான், தாயகம் திரும்பும் அனைவருமே தமிழ் பேசுகிறவர்களாக இருக்கிறார்கள்.

## மத்திய மாநி ஒருங்கிணைப்பு

இவர்கள் பிரச்சனைகளை தமிழ்நாடு அல்லது தென் மாநிலங்கள் மட்டும் சுமந்துக் கொள்ள முடியாது, வடக்கேயும் எங்கே வாய்ப்புகள் உள்ளதோ அங்கே குடியமர்த்த உள்துறை அமைச்சு எண்ணி வருகிறது.

என்றாலும் கூட, மத்திய அரசுக்கும், தென்மாநிலங்களுக்கும் ஒருசரியான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவேண்டுமென்று உள்துறை அமைச்சு, தென் மாநிலத்திலுள்ள மத்திய மறுவாழ்வு இயக்கத்துடன் மறுபரிசீலனை செய்திடயோசனை கூறியுள்ளது.

## தொண்டு நிறுவனங்கள்

தென் மாநிலங்கள் தங்கள் நிர்வாகத்தோடு தொண்டு நிறுவனங்களையும், தொழிற்பயிற்சி நிறுவனம், ஒருங்கிணைந்த ஊரகத் வளர்ச்சி திட்டம் முதலானவற்றின் நிர்வாக ஏஜன்ட்கள் மற்றும் இந்திய விவசாய ஆய்வுக் கழகம் போன்றவற்றோடு இணைந்துக் கொள்ளவும் ஆலோசனை கூறியுள்ளது.

## தீவிர திட்டம்

இலங்கையிலிருந்து ஏராளமானவர்கள் திடீரென்று தாயகம் திரும்பி விட்டால் சமாளிக்கக்கூடிய வகையில் தீவிர திட்டம் ஒன்றை தயாரிப்பது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் (1964, 1974) லேட்சம் பேரும் (இயற்கை உற்பத்தியின் மூலம்) அதிகரித்தவர்களும் (1981 அக்டோபர் மாதத்திற்குள்) இந்நாட்டிற்கு திரும்ப வேண்டும் ஆனால் 1985 நவம்பர் வரை 3,33,843 பேரும் அவர்களோடு (இயற்கை அதிகரிப்பு) 1,25,560 பேரும் தான் இந்த நாட்டிற்கு திரும்பியுள்ளன. இவர்களில் 95 சதவீதமானவர்கள் தமிழ் நாட்டிலேயே குடியேறியுள்ளனர்.

புது டெல்லியில் பெப்ரவரி 22-ந் தேதி தாயகம் திரும்பியோர் அகதிகள் பிரச்சனைகள் குறித்து பேச 16 மாநில அமைச்சர்களை உள்துறை அமைச்சு அழைத்திருக்கிறது.

தாயகம் திரும்பியோர், அகதிகள் குடியமர்த்துவதுதொடர்பாக பல பிரச்சனை பற்றி விவாதிப்பதே இந்த மாநாட்டின் நோக்கம்.

இலங்கையிலிருந்து மட்டுமல்ல; கிழக்கு பாகிஸ்தான், திபெத், பர்மா, இன்னும் பல நாடுகளிலிருந்து வந்தவர்கள் இன்னமும்நிரந்தரமான ஒருகுடியேற்றத்திற்காக காத்திருக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. o

**மக்கள் மறுவாழ்வு**

**சந்தா விபரம்**

தனிப்பிரதி: 75 காசுகள்
ஆண்டுச்சந்தா: ரூபா 10 00

சந்தாவை 'மக்கள் மறுவாழ்வு' என்ற பெயருக்கு மணியார்டர், போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும்.

விபரங்களுக்கு :

**மக்கள் மறுவாழ்வு**
சென்னை-600094.

# மலையக மக்களும் -

‘‘சென்னையில் தொண்டமான்’’ என்ற ‘பிறைசூடி’ அவர்களின் கட்டுரையைத் தொடர்ந்து ‘கணபதி’ அவர்கள் ஒரு சர்ச்சையைக் கிளப்பினார். இதோடு தொடர்புடைய இன்னொரு கட்டுரையை ‘காமினி சால்வடார்’ எழுதினார்.

மீண்டும் இவர்களுக்கு ‘பிறைசூடி’ அவர்கள் பதிலளிக்கும் கட்டுரை இது-

மலையக மக்களின் உரிமைப் போராட்டமும் ஈழ விடுதலை போராட்டமும், தவிர்க்க முடியாத வகையில் ஒன்றிணைந்து விட்டன என்பது என்னுடைய முடிவு. இது சரியான முடிவு தானா என்று இரு கட்டுரையாளர்கள் கேள்விகளை எழுப்பியுள்ளார்கள். என்னுடைய கட்டுரை வெளிவந்து அதனைப் பற்றிய இரு சர்ச்சைக் கட்டுரைகள் வெளிவருவதற்கிடையில் எனது முடிவு சரியானதே என்பதை அண்மைக் கால மலையக நிகழ்ச்சிகள் நிரூபித்து விட்டன. எனினும் இம் முடிவினை சிந்தனை பூர்வமாக எடைபோடுவதற்கு நிறைந்த அவகாசங்கள் தரப் படவேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இனவாத மென்று கணபதி குறிப்பிடுகிறார் என்றால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இனவாத மென்பது வேறொரு இனத்தினை அழிக்கவோ, ஒடுக்கவோ முற்படுவதே. யூதர்களுக்கு எதிராக இட்லர் கடைப்பிடித்தக்கொள்கை இனவாதம் கறுப்பர்களுக்கு எதிராக வெள்ளையர் தென் ஆப்பிரிக்காவில் கடைப் பிடிக்கும் கொள்கை இனவாதம். தமிழ் மக்கள் ஈழம் கோருவதோ, மலையக மக்கள் குடியுரிமை கோருவதோ இனவாதமல்ல. அது உரிமை மறுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டம், அவர்களது உரிமைகளை இன ரீதியில் மறுப்பதும், பறிப்பதும் இனவாதம் இலங்கையில் நெடுங்காலமாகவே இனவாதம் தலை தூக்கி இன்று பூதாகாரமாக வளர்ந்துள்ளது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ‘இனவாதம்’ இருப்பது போல் தோன்றினாலும் அது இனவாதம் அல்ல, உதாரணமாக சிங்களவர்கள். சிங்கள மொழி- பண்பாடு, சமயம் ஆகியவற்றை வளர்க்க செயற்படுவார்களேயானால் அதனை நாம் இனவாதமென்று கூற மாட்டோம்.

உதாரணமாக 1956ம் ஆண்டுக்குப் பின்னர் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியையும் விழிப்புணர்ச்சியையும் நாம் வரவேற்கிறோம். சிங்களமொழி ஆட்சி மொழியாவயும் நாம் வரவேற்கிறோம். ஆனால் தமிழ்மொழிக்கு உரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்தோம்.

தமிழ் மக்களின் மறுமலர்ச்சியை ஆட்சிப்பலத்தைக்கொண்டும், பெரும் பான்மை என்று மமதை உணர்வுகளாலும் எதிர்ப்பதை, நசுக்குவதை நாம் இனவாத மென்கிறோம். மலையக மக்களின் குடியுரிமை பறித்ததை நாம் இனவாத மென்கிறோம். மலையக மக்கள் நாங்கள் ஒரு தனித்துவமிக்க மக்கள் சமுதாயம் என்று கூறிக் கொண்டு, தனிப்பட்ட பண்பாட்டு இயக்கங்களும் சமுக, அரசியல், தொழிற் சங்க அமைப்புகளும் உருவாக்கிக் கொள்வதை நாம்இனவாத மென்று கூறமுடியுமா?

இன்று சிறிமா பண்டாரநாயகா கூறுவது போல் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கினால் கண்டிச் சிங்கள இனம் அழிந்துவிடும் என்று கூறுவது இனவாதம். மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது, சர்வதேச சட்டப்படி, அடிப்படை மனித உரிமைகளின் படி, மறுக்க முடியாத பிறப்புரிமைகளின் அடிப்படையின் படி சரிதானா என்று நோக்குவதில்லை. அவர்கள் தமிழர்கள், நாங்கள் சிங்களவர்கள்- சற்று எங்களை உயர்த்தி அவர்களைத் தாழ்த்த வேண்டும் என்று எண்ணுவதும் செயற்படுவதும் தான் இன வாதம்.

ஓரினம் ஒடுக்குகிறது. ஓரினம் அடக்கு முறையை எதிர்க்கிறது. இருவரும் இன ரீதியில் செயல் படுகிறார்கள். ஆனால் முதலாவது இனவாதம். இரண்டாவது விடுதலைப் போராட்டம். உரிமைகளை அடிப்படையாக வைத்துப் போராடுவது. முதலாவது இனரீதியை அடிப்படையாக வைத்து ஒடுக்குவது- முதலாவதற்கு உரிமையோ நேர்மையோ அடிப்படை அல்ல. இனத்தின் பலமே அடிப்படை.

கணபதியின் கட்டுரையில், இரண்டையுமே இனவாத குறிப்பிடுவதானால், ஒரு சிந்தனைக் குழப்பம் ஏற்படுவதாக எனக்குத் தெரிகிறது.

ஆனால் இன வாதத்தை வெற்றிகரமாக எதிர்ப்பவர்கள் இனவாதிகளாகி விடுவதுண்டு. இன்றைய இஸ்ரேல் ஒரு இனவாத நாடு பாலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து, தொடர்ந்தும் நிராகரித்து வருகிறது. அது போலவே சில தமிழ் விடுதலை இயக்கங்களும் இனவாத இயக்கங்களாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமலில்லை. போராட்ட உக்கிரத்தில் இந்தப் போக்குகளைப் பொருட்படுத்த முடியாது அதைப்பற்றி விமர்சிக்க வேண்டிய அவசியம் இப்போதில்லை என்று நான் கருதுகிறேன். இதுபோன்ற நுணுக்கங்கள் திசை திரும்புவதற்கும் சிந்தனைகளைக் குழப்புவதற்குமட்டுமே பயன் படும். சிங்கள-தமிழ்க் கலவரங்கள் உண்டாகும் போது, பகைமை உணர்வுகள் கொந்தளிக்கும் போது, நான் தமிழனா சிங்களவனா என்றகேள்வியில் உயிர் ஊசலாடும் போது யார்தான் இனவாதியில்லை? சிறைச்சாலையில் சிங்கள இன வெறியர்களிடம் தர்க்க ரீதியாக தர்க்கிக்க முயன்ற அருமை நண்பர் ராஜசுந்தரம் இனவெறியாளர்களால் கொடூரமாக கொல்லப் பட்டார். இன்றைய இலங்கையில் இனவாதம் தர்க்கக் களமா, கொலைக் களமா? ஆகவே நடை முறைகளில் யதார்த்தத்தின் பூரிப்பில் புத்தகக் கருத்துக்களின் தூய்மை

# ஈழ

கள் மாசடையலாம். கணபதிகள் கலங்கத் தேவையில்லை.

இனி மலையகத் தமிழர்களின் எதிர் காலம் பற்றி சிந்திப்போம், அந்நியராட்சிக் காலத்தில் கூலிகளாகக்கொண்டு செல்லப்பட்ட மலையக மக்கள் இலங்கை வரலாற்றில் முன்னோடித் தொழிலாளர் வர்க்கமாக உருவெடுத்தார்கள். வர்க்கப் போராட்டங்களை நடத்தினார்கள். அவர்களிடம் வர்க்க உணர்வு இருந்தது. ஆனால் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்திருந்த சிங்கள மக்களிடையே இன உணர்வே இருந்தது. இலங்கை வாழ் தமிழ் மக்களிடையேயும், சிங்கள மக்களிடையேயும் இன உணர்வுகளே பூரணமாக பரிணமித்திருந்தன. அதுவே காலப் போக்கில் அவர்களின் அரசியலாகவும் போராட்டமாகவும் அடித்தளம் அமைத்துத் தந்தது. அது இன்று பூதாகரமாக போர்க் கோலம் பூண்டு நிற்கிறது,

# விடுதலைப் போராட்டமும்

**'பிறைசூடி'**

மலையகத் தொழிலாளர் வர்க்கம் அதனின்றும் விலகி நின்றது. மலையகத் தொழிலாளர்களின் குடி உரிமைப் பறிக்கப்பட்ட பொழுது, மூன்று எதிர்ப்புக்குரல்கள் கிளம்பின. ஒன்று பலவீனமான தமிழ் எதிர்ப்புக்குரல்—இன ரீதியில் தந்தை செல்வா அவர்கள் இதனைத் தமிழின ஒடுக்கலின் முதற்கட்டமாகக் கருதினார்கள். இரண்டு வர்க்க அடிப்படையில் கர்ச்சித்த எதிர்ப்புக்குரல் சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இதனை வர்க்க நாசச் செயலாகக்கருதி எதிர்த்தனர். மூன்றாவது எதிர்ப்புக்குரல் இந்தியாவினுடையது. குடியேற்ற ஒப்பந்தங்களுக்கு முரணான செயல் என்றும் தார்மீக அடிப்படையிலும் இந்தியா எதிர்த்தது.

பதினைந்து வருடங்களுக்குப் பிறகு வர்க்கங்கள் மலையக மக்களை காலை வாரிவிட்டன, சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாக சிறிமாவின் சுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஆட்சி நடத்திய காலத்தில்தான் மலையகத் தொழிலாளர்கள் நாடு கடத்தப்பட்டார்கள். இந்தியாவும் அதன் எதிர்ப்பைக் கை விட்டு ஏதாவது ஒரு வகையில் பிரச்சினையைத் தீர்த்து வைப்போமே என்று எண்ணியது,

இக்கட்டத்தில் தான் வட-கீழ் இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப் போர் உக்கிரமடைந்தது. அவர்களது புதிய பார்வையில் மலையக மக்கள் தமிழினம் என்ற காரணத்திற்காக ஒடுக்கப் படுகிறார்கள் என்ற உண்மை உதயமானது. தோட்டங்கள் தேசிய உடமையாக்கப்பட்ட முறை அப்பொழுது கட்டவிழ்த்து விடப்பட்ட கோஷங்கள், தோட்டங்களை கிராமங்களாக்குவோம் என்ற கோஷத்தோடு தோட்டத்தொழிலாளர்களைத் தாக்கியும் வேலை நீக்கம் செய்தும், வீடுகளை எரித்தும், பட்டினிப் போட்டும், எள்ளி நகையாடியும், ஏளனம் செய்தும். அலட்சியப்படுத்தியும் செய்த இனவாத கொடுமைகள் மலையக மக்களிடையே தமிழுணர்வு தழைக்க வழிவகுத்தது. வர்க்க உணர்வுகள் மழுங்கி இன உணர்வுகளே பரவின. கட்சி அரசியல் இதனை மேலும் வளர்த்து விட்டது. ஈழ விடுதலைப் போராளிகளும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியும் மலையகத் தமிழர்களின் உரிமை மறுப்பையும், நாடு கடத்தலையும் சர்வதேசப் பிரச்சனையாக்கி எதிர்த்தன. அமெரிக்க மாநிலமான மஸ்ஸாசூசெட் சட்டமன்றத்தில் மலையகத் தமிழர்களின் உரிமை மறுப்பை ஓர் காரணமாக கொண்டு ஈழக் கோரிக்கையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஈழத்தின் வரை படங்களில் மலையகப் பகுதியும் இணைத்துக்காட்டப் பட்டது.

சிங்கள இன வெறிக் கொடுமையால் இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்ட மலையகமக்கள் வட-கீழ் மாநிலங்களில் சென்று குடியேறினார்கள்.

சமுதாய, கலாச்சார உறவுகள் பெருகின கல்விக்காகவும், கலைக்காகவும், யாழ்ப்பணம், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய பகுதிகளுக்கு மலையகத்தவர் சென்றனர். திருமண உறவுகளும் ஏற்பட்டன. விடுதலை அரசியலும் மலையகத்தில் பரவியது ஈழ விடுதலை அரசியலில் மலையக மக்களின் அடிப்படை உரிமை முக்கிய அங்கம் வகிக்கத் தொடங்கியது.

வர்க்கங்கள் மறந்து விட்ட தோழமை உணர்வுகள், இன ரீதியில் மலர்ச்சியடைந்தன. இந்தியா ஆறு லட்சம் தொழிலாளர்களை நாடு கடத்த ஒப்புக் கொண்ட பின்னர் வர்க்க உணர்வே வரண்டு போனது. இந்தியாவா இலங்கையாஎன்ற பேச்சே மலையகத்தில் எதிரொலித்தது. இந்தியா செல்ல முடிவு செய்தவர்கள் தமிழகம் செல்கிறோம் என்ற தமிழுணர்வில் மிதந்தார்கள் இலங்கை என்றவர்கள் சிங்கள இன வெறி தாங்காது, வடகீழ் மக்களுடன் தொடர்பு கொள்ள அவாவினர். ஆகவே, மிக இயற்கையாகவே, மலையகத் தொழிலாளர் வர்க்கம் தமிழின சோதரர்களாக மாறினார்கள்.

இந்தியாவிற்கு சென்றுவிடுவோம் என்ற எண்ணத்தில், சிங்கள இன வெறியைச் சகித்துக் கொண்டார்கள். இனிமேல் இந்தியா இல்லை என்று தீர்மானித்த பிறகு அவர்களைக் கவர்ந்த அரசியல் ஈழ விடுதலை அரசியல் வர்க்க அரசியல் அல்ல. அது தான் இலங்கையில் எங்கே இருக்கிறது என்று கண்டு பிடிக்க முடியவில்லையே. இங்கிலாந்தில் நிறவெறி தலை விரித்தாடும் பொழுது வர்க்க உணர்வுகள் ஓடி ஒளிந்து கொள்கின்றன. இலங்கையிலும் அப்படித்தான்.

சிங்கள மக்கள் மத்தியில், பௌத்த-சிங்கள அரசியல் ஒழிந்து வர்க்க உணர்வுகள் மேலோங்கும் போது மலையகத்தமிழர்களும்வட-கீழ் மாநில தமிழ்த்தொழிலாளர்கள், இனப் போர்வையைக்களைந்துவிட்டு இணைந்து கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை ஆனால் இன்றையஎனது கவசம் இனப் பட்டறையில் வார்க்கப்பட்டது என்று தான் மலையக மக்கள் எண்ணுகிறார்கள் இந்த இன உணர்வின் கொந்தளிப்பால் தான் தமிழகமும், ஈழவிடுதலை இயக்கங்களும் ஒரே உணர்ச்சிப் பிரவாகத்தில் பிரளயமாகின்றன. மலையத் தமிழர்களை மட்டும் இது ஒதுக்கிவிட முடியுமா? ஜயவர்த்தனா - தொண்டமான் கூட்டால் இந்த தமிழின உணர்வுகளின் கொந்தளிப்பைக் கட்டுப்படுத்த முடியாது.

ஆகவேதான் ஈழம் மலையக மக்களின் எதிர்காலத்திற்கு எந்த தீர்வாகுமா என்ற வாதப் பிரதிவாதங்களெல்லாம் ஒதுக்கித் தள்ளப்பட்டு தமிழின உணர்ச்சிப் பெருக்கு கொந்தளிக்கும் கடலென குமுறி எழுகிறது. மலையகத் தமிழர்கள் அடக்கி வைத்திருந்த அந்த தமிழ் உணர்வுகளை சற்றே கட்டவிழ்த்து விட்டதன் பலன் தான் தலவாக் கொல்லையும், வட்ட கொடையும் போகவந்தலாவையும்.

இனி வட கீழ் மாநிலத் தமிழர்கள் ஆனாலும் சரி; மலையகத் தமிழர்கள் ஆனாலும் சரி, இலங்கைத்தமிழர்களின் விமோசனத்திற்கு இந்தியாவே உத்தரவாதமாகிறது. இதனாலும் இவ்விரு சாராரின் அரசியல் இணைகிறது இன உணர்வால் வால் வளர்கிறது. சிங்கள அரசியல் தலைவர்களின் போக்கால் இந்த இணைப்பு நியாயப் படுத்தப்படுகிறது. மலையக மக்களுக்கு உண்மையான பாதுகாப்பு இந்த இணைப்பும் அவர்களது தற்பாதுகாப்பு ஆற்றலுமே. இன்று இல்லாத வர்க்க ஒற்றுமை, ஒற்றுமை உண்மையான பாதுகாப்பாகும் என்று கற்பனை.

ஆனால் என்றோ ஒரு நாள் சோஷலிச சமுதாயம் உருவானால் அன்று தமிழ் - சிங்கள முரண்பாடு இருக்காது. நாளைய உணவை இன்றைய இலையில் பரிமாற முடியுமா?

## அகதிகள் பாதுகாப்பு:

# ஐ. நா. வின் நியதியும் இந்தியாவின் சேவையும்

[அகதிகளுக்கு இந்தியா தஞ்சமளித்து பல உதவிகளும் செய்து வருகிறதாயினும் ஐ. நா. தீர்மானித்துள்ள 'நியதி உடன் பாட்டில்'' இந்தியா. இதுவரையில் தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. அவ்வாறு இணைத்துக் கொள்வதால் புதிய ''சுமை'' ஏதும் ஏற்படாது என்பதும் அகதி நிவாரணப் பணியில் அரசின் செலவைக் குறைத்துக்கொள்ள அது உதவும் என்பதும் திரு. தூரணியின் கருத்து.

## ஐ. நா. போற்றியுள்ளது

அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பதில் இந்தியாவை எந்த நாடும் விஞ்ச முடியாது, இந்தத் தொண்டை ஐ நா. அகதி நிறுவனமே போற்றிப் பாராட்டியிருக்கிறது, (United Nations High Commission for Refugees-UNHCR என்பது இந்த நிறுவனத்தின் பெயர்),

ரெஃப்யூஜிஸ் (Refugees அகதிகள்) என்ற மாதச் சஞ்சிகை ஒன்றை இந்த நிறுவனம் வெளியிடுகிறது. இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியா அளிக்கும் நிவாரணம் பற்றி அப்பத்திரிகையின் டிசம்பர் மாத இதழில் அட்டைப்பட (பிரதான) கட்டுரை பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. 'தமிழ் நாட்டில் ஸ்ரீ லங்காவாசிகள்'' என்பது அதன் தலைப்பு. கூட்டம் கூட்டமாகத் தன் பிரதேசத்துக்கு வந்த இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக அகதிகள் என்ற அந்தஸ்தைவழங்கி இந்தியா உதவி செய்வதை இக்கட்டுரை பாராட்டியிருக்கிறது. அவர்களுக்கு அளிக்கப் படும் வசதிகளையும் அது விவரித்துள்ளது.

1960 தசாப்தத்தில் திபேத்திலிருந்து வந்த அகதிகளுக்கு இந்தியா தஞ்சம் அளித்தது. அப்போது ஐ.நா அகதி நிறுவனம் இந்தியாவில் தன்னுடைய பிரதிநிதி ஒருவரை நியமித்தது. பின்னர் வங்காள தேச (கிழக்குப் பாகிஸ்தான்) அகதிகள் வந்தனர். 1975-ல் ஐ.நா நிறுவனப் பிரதிநிதியின் அலுவலகத்தை மூடி விடுவதற்கு அந்நிறுவனத்தின் தலைவர் சத்ருத்தீன் ஆகா கான் முடிவு செய்தார். அந்த அலுவலகம் தொடர்ந்து இயங்குவது அவசியம் இல்லை என்று அவர் கூறினார். ஆனால் சீனாவின் தயவைப் பெறுவதற்காகவே அவர் இவ்வாறு செய்ததாக அப்போது சந்தேகிக்கப்பட்டது.

வங்காளதேச நெருக்கடியின் போது (பாகிஸ்தானுக்குச் சாதகமாக) நடந்துகொண்ட விதமும் ஜ்யா ரிஜ்வி என்ற தம்முடைய பாகிஸ்தானி உதவியாளருடன் அவருக்கு இருந்த நெருக்கமும், அவரது சொந்தப் புகழ் வேட்கையும் இச்சந்தேகத்தை உறுதி செய்தன

## அமைப்பு பற்றி இந்தியாவின் நிலை

பின்னர் ஆப்கானிஸ்தான். ஈரான் நாடுகளில் இருந்து கணிசமான அகதிகள் இந்தியாவுக்கு வந்ததைத் தொடர்ந்து ஐ. நா. நிறுவனம் மறுபடியும் தனது அலுவலகத்தை இந் நாட்டில் ஏற்படுத்தியது. ஆனால் ஐ.நா. அகதி நிறுவன அலுவலகமாக அல்லாமல். ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் UNDP கீழ்தான் அது இயங்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் நிபந்தனை விதித்தது.

பொதுவாக அகதிகள் சம்பந்தமாக ஐ.நா.ஸ்தாபனம்மூன்று ஏற்பாடுகளைச் செய்துள்ளது, (1) ஐ.நா. அந்த நிறுவனத்தை அமைப்பதற்காக 1950ல் வகுக்கப்பட்ட சாசனம். (2) அகதிகளின் அந்தஸ்து சம்பந்தமாக 1941ல் வகுக்கப் பட்ட நியதி (convention) (3) அந்த நியதியை உள்ளடக்கி 1967ல் வகுக்கபபட்ட நகல் ஒப்பந்தம். (Protocol)

''1951, ஜனவரி 1ந் தேதிக்கு முந்திய சம்பவங்களின் விளைவாக அகதிகளானவர்கள்'' என்ற கால வரம்பு முந்திய 'நியதி'யில் குறிப்பிட்டிருந்தது. 1967ஆம் வருஷ நகல் ஒப்பந்தம் இந்தக் காலவரம்பை நீக்கி, எல்லா அகதிகளுக்கும் உதவியளிக்க வழி செய்கிறது. இரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இதுதான்.

## ஐ. நா. வின் கடமைகள்

''முற்றிலும் அரசியல் சார்பு இல்லாமல், மனிதாபிமானத்துடனும் சமூகப் பணியாகவும் அகதி கோஷ்டிகளுக்கு'' ஐ. நா. அகதி நிறுவனத் தலைவர் (ஹைகமிஷனர்) உதவி செய்ய வேண்டும் என்று ஐ. நா. பொதுச் சபை தீர்மானம் கூறுகிறது. அவருக்கு ஆலோசனை தீர்மானம் கூறுகிறது. அவருக்கு ஆலோசனை கூறுவதற்காக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிர்வாகக் கமிட்டி'' 1957-ல் அமைக்கப்பட்டது.

அகதிகளுக்குச் சர்வதேச பாதுகாப்பு அளிப்பது, பணபண்ட உதவி அளிப்பது என்ற இரண்டு முக்கிய கடமைகள் ஐ.நா. அகதி நிறுவனத்துக்கு உண்டு. பாதுகாப்பு விஷயத்தில் சம்பந்தப்பட்ட நாட்டின் கருத்து ஐ.நா. நிறுவனத்தைக் கட்டுப்படுத்தாது.

ஆனால், 'உதவி அளிக்கும்' விஷயத்தில், அகதிகளை ஏற்றுக் கொள்ளும் நாட்டின் சம்மதத்துடன் ஐ .நா. நிறுவனம் செயல் புரியும்.

யார் யாரை அகதிகளாகக் கருதலாம், யாருக்குத் தஞ்சம் அளிப்பது, தங்களுடைய உயிருக்கும் சுயேச்சைக்கும் ஆபத்து ஏற்படுத்தக் கூடிய சொந்த நாட்டுக்கு அகதிகளைத் திருப்பி அனுப்பாமல் தடுப்பது ஆகியவை ஐ. நா. நிறுவனத்தின் பிரதான அலுவல்கள்.

'ஒரு நாட்டின் குடியுரிமை பெற்றவர், அல்லது குடியுரிமை இல்லாவிடில், ஒரு நாட்டில் முன்பு வழக்கமாக வசித்தவர். தமக்குக் கொடுமை இழைக்கப் படும் என்று ஆதார பூர்வமாக அச்சமுற்று அந்நாட்டிலிருந்து வெளியேறினால்'' அவரை ஐ. நா. நிறுவனம் பாதுகாக்க முடியும்.

''தம்முடைய இனம், மதம், தேசிய வம்சாவளி, சமூகக்குழு அல்லது அரசியல் கருத்துக்கள் காரணமாகத் தமக்குக் கொடுமை இழைக்கப்படும் என அவர் அஞ்சக் கூடும். இந்த பயம் காரணமாக அவர் அந்த நாட்டின் சர்க்கார் அளிக்கும் பாதுகாப்பை ஏற்கவோ, அந் நாட்டுக்குத் திரும்பிச் செல்லவோ விரும்பாமல் இருக்கக் கூடாது.

## ஐ. நா. நியதி

ஐ.நா.நியதி, நகல் ஒப்பந்தம் ஆகியவை அவற்றை அங்கீகரித்துக் கையெழுத்திடும் நாடுகளையே கட்டுப்படுத்தும்.(அகதிகளுக்குத் தஞ்சம் அளிப்பது பற்றி மேலே பார்த்தோம்;) ஐ. நா. நியதியின் மற்ற முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. தஞ்சம் புகுந்த நாட்டின் சட்ட திட்டங்கள், பொது ஒழுங்குப் பராமரிப்பு ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு ஒவ்வொரு அகதியும் நடந்து கொள்ள வேண்டும்.

2. அகதிகளின் மதம், இனம், பூர்வீக தேசம் ஆகியவை காரணமாக அவர்களை பாரபட்சமாக நடத்தக்கூடாது, பொதுவாக, ஒரு நாட்டில் வாழும் அந்நியர்களைப் போல வே அகதிகளையும் நடத்த வேண்டும்.

(10-ம் பக்கம் பார்க்க)

# சின்னக் குழந்தைகளின் பெரிய வேதனைகள்

நாட்டின் எதிர்காலம் குழந்தைகள்; இன்றைய குழந்தைகள் வருங்கால மன்னர்கள். இப்படி பல கோஷங்களையும் கூப்பாடுகளையும் கேட்டு கேட்டு காது செவிடாகிப் போயிற்று ஆனால் உலகத்திலேயே அதிக குழந்தை தொழிலாளர்கள் இந்தியாவில் தான் உள்ளதாக உலக குழந்தைகள் கல்வி நிறுவன(UNCEF)ஆய்வு கூறுகிறது. நாமும் தினசரி வாழ்வில் சந்திக்கும் இந்த பிஞ்சு இனங்களின் வேதனைகள் தான் எத்துணை?

பதினான்கு வயத்திற்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு பயன்படுத்த கூடாது. சட்டம் இருக்கிறது. (அரசியல் நிர்ணய சட்டம் 24வது ஷரத்து) நமது அரசியல் சட்டம் நிர்ணய சட்டத்தின் 45வது ஷரத்து 1960க்குள் ஆரம்ப கல்வியை கட்டாயமாக எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்பதை நாட்டின் குறிக்கோளாக கொண்டு இயற்றப் பட்டதாக சட்ட வல்லுநர்கள் சொல்கிறார்கள். காகிதச் சட்டங்கள், கருகி கொண்டிருக்கும் இச்சிறுவர்களை கண்டு கொள்வதேயில்லை. ஆண்டும் 1986ஆகி விட்டது. குழந்தை தொழிலாளர்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி கொண்டு போகிறது.

மூதலில் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் குழந்தைகளை பற்றி பார்ப்போம். தென் மாவட்டங்களில் மட்டும் சுமார் 50,000 குழந்தைகள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் அமர்த்த பட்டுள்ளனர்.

இதில் பெரும்பாலோனர் 8 வயதிற்குட்பட்டவர்கள் காலை விடியகாலை 3 மணிக்கே வேலைக்கு செல்கின்றனர். மாலை 8 மணிக்குதான் வீட்டிற்கு திரும்புகின்றனர். ஆனால் 14 மணிநேர வேலைக்கு அவர்கள் பெரும் கூலியோ 5 ரூபாய். ஒரு குழந்தை சராசரியாக ஒரு டஜன் பாக்கெட்டுகள் ஆயிரம் நிரப்புவதாகவும், மேலும் 7000 லேபிள்களை ஒட்டுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. மிக வேகமாக வேலைகள் செய்யவேண்டியிருப்பதால் 15 வயதிற்குள் இவர்களுக்குள் நரம்பு தளர்ச்சி வந்து கைகால்கள் நடுக்கம் எடுக்க ஆரம்பித்து விடுகிறது.

மேலும் பல குழந்தைகள் கொதிக்கும் உலைகளுக்கு அருகில் பணி புரிய வேண்டியிருப்பதால் கடும் தொழிற்சாலை நோய்களுக்கு உள்ளாகிறார்கள். டி.பி போன்ற நோய்கள் பெருவாரியாக காணப் படுகிறது. உடல் வளர்ச்சியும் மன வளர்ச்சியும் வெகுவாக பதிக்க படுகிறது.

பாஸ்பரஸ் போன்ற நச்சு பொருள்கள் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிறசாலைகளில் மிகுதியாக பயன் படுத்த படுவதால் இருமல், சளியும் குழந்தைகளை நீங்காமல் பிடித்துள்ளது. இக்குழந்தைகளில் குரல்களும் அசாதரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. கண்களில் பலமான எரிச்சல் ஏற்படுகிறது. இப்படி இவர்களை கசக்கி பிழியும் முதலாளிகள் தங்களை குழந்தைகளின் இரட்சகர்களாக காட்டி கொள்கிறார்கள். ஐந்து வயதில் கிராமத்து பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகளை ஆசிரியர்கள் பலர் சிறிதும் மனிதாபிமானம் இல்லாமல் அடி, திட்டு போன்றவைகளை வாரி வழங்கி நேசிப்பதால் பள்ளிக்கு செல்லும் சில சிறுவர்களும் பள்ளியை விட்டு நின்று போகின்றனர், அவர்களின் ஒரே மாற்று வழி தீப்பெட்டி தொழிற்சாலைகள்தான். ஆசிரியர்கள் தங்களுடைய வருமான பற்றாகுறை குறிக்கோளின்மை போன்றவற்றால் ஏற்படும் கோபதாபங்களை காட்ட இந்த குழந்தைகள்தானா கிடைத்தார்கள்? இதனால் பல குழந்தைகள் பள்ளியில் மழைக்கு ஒதுங்கக்கூட பயப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் பீடி சுற்றும் தொழிலில் பல சிறுவர்கள் குறிப்பாக சிறுமியர் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களில் பெரும் பாலோனர்முஸ்லீம் பெண்கள் காலை முதல் மாலை வரை பீடி சுற்றினால் சுமார் ஐந்து ரூபாய் கிடைக்கும். மேலும் பெரியார், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் விசை தறி தொழிலில் ஈடுபடுகின்றனர் விசை தறியின் வேகத்தைவிட அதிக வேகமாக அவர்கள் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது,

விவசாய வேலைகளிலும் மாடு மேய்க்கவும் சிறுவர்கள் உட்படுத்தப்படுவது நம்நாட்டில் மிக சாதாணம் வருடம் ரூபாய் 50வும், மற்றும் தினசரி சாப்பாடு மட்டும் கொடுத்து பல குழந்தைகள் கொத்தடிமைகளாக பண்ணைகளில் வேலை செய்கின்றனர், வயதானவுடன் ஈவு இரக்கமின்றி வேலை மறுக்க படுகின்றனர். ஆந்திர பிரதேச கல் உடைக்கும் குவாரிகளில் பல கொத்தடிமைகளின் குழந்தைகள் கல் சுமக்க ஆரம்பிக்கும் வயது நான்கு. இவ்வாறு இந்த பிஞ்சு மனங்களின் வேதனைகள் தான் எத்தனை?

பிரிட்டோ

பஸ் நிலையம் போன்ற இடங்களில் கூலி வேலை செய்யும் சிறுவர்கள்தான் எத்தனை? மேட்டு பாளையம் பஸ் நிலையத்திலிருந்து இரயில் நிலையத்துக்கு கூலி சுமந்து செல்லும் சிறுவர்களில் பெரும்பாலோனர் நடக்கக்கூட சக்தி அற்றவர்களாக இருக்கின்றனர். இச்சிறுவர்களின் தலையில் அவர்களைவிட இரண்டு மடங்கு எடை உள்ள எடையை வைத்துவிட்டு, சிறுவர்கள் தானே என்று இரண்டு ரூபாய், ஒன்னறை ரூபாய் என்று கொடுத்து அவர்களை மிரட்டுவார்கள். யார் தெரியுமா? ஊட்டி உல்லாச பயணம் போகிறவர்கள். அவர்களின் தேனிலவில்தேயும் பணத்தின் பற்றாக் குறையை சரிகட்ட இக் குழந்தைகள்தானா நசுக்கப்பட வேண்டும்?

மேட்டுபாளையம் பஸ் நிலையத்திலிருந்து இரயில் நிலையத்துக்கு ஒரு சூட்கேஸை சுமந்து செல்ல போர்டர்கள் பத்து ரூபாய் வாங்குகிறார்கள். இதைவிட கொடுமை இக்குழந்தைகள் தங்கள் தொழிலை கெடுப்பதாக எண்ணி லைசென்ஸ் உள்ள போர்டர்கள் இவர்களை அடிப்பது.

வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தபடும் குழந்தைகளை நினைத்து பாருங்கள். இச்சிறுமியர் பலர் அதிகாலை எழுந்து பகல் முழுவதும் உழைத்து எல்லோரும் தூங்கச் சென்றபின் பாத்திரங்களை எல்லாம் கழுவி வைத்து உறங்க வேண்டும். எஜமானின் வீட்டிலுள்ள எல்லோருடைய கோபதாபங்களுக்கும் கட்டுபட வேண்டும்.

இவர்களை மனிதர்களாக மதிக்கின்ற வீட்டு முதலாளிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம், கொடுமையிலும் கொடுமையான விசயம், இவர்களில் பலர் (10-14 வயதினர்) வீட்டு ஆண்களின் மிருக இச்சைக்கும் இறையாகின்றனர் என்று கத்தோலிக்க நிறுவனம் ஒன்று வீட்டு வேலை செய்வோர் மீது நடத்திய ஆய்வின்முடிவு தெரிவிக்கிறது.

இப்படி பல வகையான தொழில்களிலும் ஈடு படுத்தப்பட்டு எதிர் காலத்தை கேள்வி குறியோடு நோக்கும் இவர்களுக்கு அரசு செய்ய வேண்டியவை ஏராளம். இலவச (மிகவும் முக்கியம் தரமான) கல்வி. இது மட்டும் போதாது. பெற்றோர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பும் கூலியும் கிடைக்கும் வரை சத்துணவு போட்டாலும் சீருடை வழங்கினாலும் பாட புத்தகங்கள் வழங்கினாலும் இப்பிஞ்சு மனங்களில் குடியேற முடியாது,

இருபதாம் நூற்றாண்டில் சூப்பர் கம்ப்யூட்டர்கள் வாங்கி கொண்டிருக்கின்றோம் அறிவே இல்லாத கிழட்டு விஞ்ஞானிகள் மாநாடு, கருத்தரங்கு என்று பழங்கதையேபேசிபேசி பலகோடி கணக்கான ரூபாயை வீணடித்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் பிரச்சினையும் அரசு கவனிக்குமா? O

# அகதிகள் பாதுகாப்பு ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

3. யுத்தம் அல்லது நெருக்கடியான சந்தர்ப்பங்களில், ஒரு நாடு தன்னுடைய பந்தோபஸ்துக்காக, குறிப்பிட்ட அகதிகள் மீது உசிதமான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தடை இல்லை.

4. தஞ்சம் புகுந்த நாட்டில், நீதிமன்றங்களின் உதவிகளை நாடுவதற்கு அகதிகளுக்கு உரிமை வேண்டும். (அந்நியர்களுக்குக் கூட இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள ஜீவாதார உரிமைகள் போன்றதே இது. உயிர், உடமைப்பாதுகாப்பு, சட்டத்தின் கீழ் சமத்துவம் முதலிய உரிமைகள் இவை.)

5- தங்கள் உயிர், சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சட்ட விரோதமாக ஒருநாட்டில் பிரவேசிக்கும் அகதிகளைத் தண்டிக்கக்கூடாது, ஆனால், அவர்கள் காலதாமதமின்றி அந்நாட்டின் அதிகாரிகள் முன்பு ஆஜராகி. தாங்கள் அவ்வாறு பிரவேசித்ததற்கு தகுந்த காரணம் காட்ட வேண்டும்.

6. அகதிகளின் உயிருக்கும் சுதந்திரத்திற்கும் ஆபத்து ஏற்படக் கூடிய பூர்வீக தேச எல்லைக்குள் அவர்களை சரணாலய நாடு நிர்ப்பந்தமாகத் திருப்பி அனுப்பக் கூடாது. ஆனால், புகுந்த நாட்டின் பந்தோபஸ்துக்கு ஆபத்தானவர் என்று கருதப்படும் அகதிக்கோ அல்லது புகுந்த நாட்டின் சமுதாயத்துக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய கொடிய குற்றம் புரிந்த அகதிக்கோ இந்த வசதி கிடையாது.

(ஒரு நாட்டுக்குள் புகுந்தவர்களை மட்டுமின்றி, அந்நாட்டு எல்லையில் காத்து நிற்கும் அகதிகளையும் அவர்களுடைய பூர்வீக தேசத்திற்குத் திருப்பி அனுப்பக் கூடாது என்ற கருத்துக்களை இப்போது ஒத்துக் கொள்ளப்படுகிறது. ஐ. நா. நியதி வகுக்கப்பட்டதன் பின்னர் எழுந்த விளக்கம் இது.)

7 அந்நியருக்கு ஒரு நாடு நிரந்தரப் புகலிடம் அளிக்க வேண்டும் என்று சர்வதேச நியதி கூறவில்லை. எல்லையில் நிற்கும் அகதிகளை ஏற்க மறுக்கவோ அல்லது பின்னர் அவர்களை நிர்ப்பந்தமாகத் திருப்பி அனுப்பவோ கூடாது என்றுதான் அது கூறுகிறது.

இத்தகைய அகதிகளை முதலில் பராமரித்து, பின்னர் அவர்கள் வேறு நாட்டில் தஞ்சம் பெறுவதற்கு அவகாசம் அளிப்பது சரணாலய நாட்டின் கடமை.

எவரை அகதியாகக் கருதலாம் என்பது சம்பந்தமாக ஐ. நா. அகதி நிறுவனத்தின் கருத்தை ஒரு நாடு ஏற்க மறுக்கலாம். எனினும் அக்கருத்தை பாரபட்சமின்றி அந்நாடு பரிசீலிக்க வேண்டும். மோதல் இல்லாமல், சமரசப் பேச்சின் மூலம் பரிகாரம் தேடுவதே ஐ. நா. நிறுவனத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.

## ஐ.நா. ஒப்பந்தமும் இந்தியாவும்

அகதிகள் பற்றிய ஐ நா. நியதியை இதுவரை 97 நாடுகள் அங்கீகரித்துள்ளன. இவற்றுள் சீனா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஈரான், இஸ்ரேல், ஏமன் ஆகிய தேசங்கள். இந்தியதியை இந்தியா இன்னமும் அங்கீகரிக்கவில்லை. எனினும் கடந்த அக்டோபர் மாதம் ஐ.நா நிறுவனத்தின் அலுவலகம் ஏற்கனவே இந்நாட்டில் இயங்கி வருகிறது.

ஐ.நா நியதியை முறையாக அங்கீகரிப்பதன் மூலம், அகதிகளின் பாதுகாப்பு சம்பந்தமாகச் சர்வதேச அரங்கில் இந்தியா தன்னுடைய பங்குப் பணியை ஆற்றலாம். இது போன்ற விஷயங்களை சம்பந்தப்பட்ட இரு நாடுகளும் மாத்திரமின்று, எல்லா நாடுகளும் சேர்ந்து கவனிக்க வேண்டும். பல தேச ஒத்துழைப்பு (Multilateralism) என்ற கோட்பாட்டில இந்தியாவுக்கு நம்பிக்கை உண்டு.

தவிர, ஐ.நா உறுப்பு நாடு என்ற முறையில் இந்தியா ஏற்கனவே ஏற்றுக் கொள்ளாத புதிய விலங்கம் எதையும் இந்த அகதி நியதி விதிக்கவில்லை. மற்றும், அகதி நிவாரணப் பணியில் ஐ.நா நிறுவனத்தின் உதவியைப் பெறுவதன் மூலம் நம் அரசின் செலவையும் குறைத்துக் கொள்ளலாம்.

(தமிழ்ச் சுருக்கம்: பி.எஸ்.)
நன்றி : தினமணி

Statement about Ownership & other Particulars regarding the Newspaper 'MAKKAL MARUVAZHVOO
[From IV] (See rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | Madras-600 094 |
| 2. | Periodicity of Publication | Monthly |
| 3. | Printer's Name | L. S. Srinivasan |
| | Nationality | Indian |
| | Address | Jai Kalidass Press 29, 4th Street, B.E. Colony Madras-24. |
| 4. | Editor's & Publisher's Name | T. S. Raju |
| | Nationality | Indian |
| | Address | 31, Gangaiamman kovil street, Madras-600 094 |
| 5. | Name & address or individuals who own the paper and partners or share holders holding more than one percent of the total capital | T. S. RAJU above address |

I, Raju hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief

28-2-86

(Sd) T. S. RAJU
Signature of Publisher


## மணமகன் தேவை

தனியார் நிறுவனம் (சென்னை) ஒன்றில் வேலை செய்யும் ரூபா 450 சம்பளம் பெறும் 22 வயது நிரம்பிய ஆதிதிராவிட (தாயகம் திரும்பிய) இனத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு மணமகன் தேவை.

எழுதவும்
வி. எண் 3
மக்கள் மறுவாழ்வு
சென்னை-600094

## மணமகள் தேவை

கூட்டுறவு நூற்பாலை (கன்னியா குமரி மாவட்டம்) ஒன்றில் வேலை செய்யும் -ரூபா 1200 சம்பளம் பெறும் 37 வயது நிரம்பிய எஸ்.எஸ்.எல்.சி பயின்ற ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த (தாயகம் திரும்பியவர்) ஆணுக்கு மணமகள் தேவை. சமமான கல்வி தகுதி பெற்ற மணமகள் விரும்பத்தக்கது.

வி,எண்: 4,
'மக்கள் மறுவாழ்வு'
சென்னை-600094

O

அரசு போக்குவரத்து கழகமொன்றில் (கன்னியா குமரி மாவட்டம்) பணி செய்யும் ரூபா 1100 சம்பளம் பெறும் - 30 வயது நிரம்பிய (தாயகம் திரும்பிய) ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த இளைஞருக்கு மணமகள் தேவை. சமமான கல்வி தகைமையுள்ள - அரசு அல்லது தனியார் தொழில் பார்க்கும் பெண் விரும்பத்தக்கது.

எழுதவும்-
வி. எண். 5,
'மக்கள் மறுவாழ்வு'
சென்னை-600094

O

கர்னாடக மாநிலத்தில் சுள்ளியாவிலுள்ள ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் - மாதம் ரூபா 500/- சம்பளம் பெறும் 26 வயது நிரம்பிய ஆதி திராவிட (தாயகம் திரும்பிய) இளைஞருக்கு மணமகள் தேவை.

எழுதவும்,
வி எண்: 6
'மக்கள் மறுவாழ்வு'
சென்னை-600094

O

# ஒவ்வொரு ஆண்டுக்கூட்ட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இவைகள் இடைத் தரகர்கள் மூலம் கட்டப்பட்டவை. இந்த வீடுகளைக்கூட உடைத்து செங்கல், கதவு முதலான பொருட்களையெல்லாம் திருடிச் செல்கிறார்கள்.

## சுப்பையா

(நெய்வேலி)

அரசுப் பண்ணைக் கழகம் மூடப்பட்டு ஆறு வருடங்கள் ஆகிறது. அப்போது, அந்த நிலங்கள் பணி செய்த தாயகம் திரும்பியோர்களுக்கே பிரிந்து கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் இருந்த மறுவாழ்வு இயக்குனர் இந்த நிலங்கள் தாயகம் திரும்பியோருக்கே பிரித்துக் கொடுக்கப்பட்டுவிட்டதாக தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அந்த நிலத்தை வேறு நிறுவனங்கள் பயன் படுத்துகின்றன.

எந்த வாய்ப்பும் இல்லாது 623 குடும்பங்கள் வறுமை கோட்டுக்குக் கீழ் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்த வாய்ப்புகளும் வருமானமும் இல்லை. இந்த பிரச்சனை கவனத்தில் எடுத்து இந்த நிலங்கள் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

## சுப்பிரமணியம்

(நெய்வேலி)

இந்த பண்ணையில் பணி செய்த இன்னும் 26 குடும்பங்கள் வீடில்லாது இருக்கிறார்கள், வீட்டுக்கடனும் வழங்கப் படவில்லை. அவர்களுக்கு வீட்டு மனையும் வீட்டுக்கடனும் வழங்கவேண்டும்.

## சுப்பிரமணியம்

(ராணிப்பேட்டை)

ராணிப்பேட்டையில் மாலக் லெதர்ஸ் என்ற நிறுவனத்தில் 40 பெண்களை தோல்பொருட்கள் தைப்பதற்காக அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தோல் பதனிடும் தொழி ஈடுபடுத்தப்பட்டார்கள். இவர்கள் மட்டுமல்ல இன்னும் பலருக்கு அங்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.

அந்நிறுவனத்தின் நிருவாகிகளால் கொடுமைக்குள்ளாக்கப்பட்டு இன்று அவர்கள் அனைவரும் வேலை இழந்து இருக்கிறார்கள்.

மிகுந்த வறுமையில் வாடுகிறார். நான் எனது சொந்த முயற்சியில் இந்த பகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் தற்காலிக வேலை வாங்கி கொடுத்திருக்கிறேன். ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு வசூல் செய்துக் கொடுத்து உதவுகிறேன்.

இவர்கள் பிரச்சனையில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்டுவதில்லை. இவர்களுக்கு எதிராகவே செயல்படுகிறார்கள். இவர்கள் உடனடியாக தலையிட வேண்டும், மாற்று வேலைகள் வழங்க வேண்டும்

## சிவசாமி

(தூத்துக்குடி)

கல்வி அடிப்படையில் தாயகம் திரும்பியோருக்கு வேலை வழங்குங்கள். மூடப்பட்ட தொழிற்சாலையில் வேலை செய்த தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் மாற்று வேலை வழங்குங்கள்

## ரெங்கன்

(ஏற்காடு)

ஏற்காடு ஸ்டேன்மோர் தோட்டத்தில் எங்கள் பிரச்சனை தீர்ந்த பாடில்லை. பலர் வேலை இல்லாது இருக்கிறார்கள் இந்த பகுதியில் எத்தனையோ அரசு பண்ணை, தோட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் இவர்களுக்குவேலை கொடுக்க வேண்டும்.

## பாலகிருஷ்ணன்

(எறையூர்)

நாங்கள் 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறோம். ஆறு மாதத்திற்கு வேலை இல்லை. நாங்கள்தான் இந்த மில்லிற்கு முதலில் வேலைக்கு வந்தவர்கள். அப்படி இருந்தும் எங்களுக்கு முன்னுரிமை மறுக்கப்படுகிறது கல்விசான்றும் கோரப்படுகிறது. இதற்கு அரசு ஆணை உண்டா?

எங்கள் குடியிருப்புகளுக்கு குடி தண்ணீர் இல்லை; கேணிகள் வெட்டிக் கொடுக்க வழி செய்ய வேண்டும்.

## மன்றும் பலர்

மற்றும் பலர் பேசினார்கள் பூபதி (மதுரை), கலைமணி (ஈரோடு) காதர் (சென்னை), வலம்புரி (தஞ்சை), ஆகியோர் தாயகம் திரும்பியோர் பிரச்சனை குறித்து விளக்கினர்.

## மாணிக்கம்

(கோவை)

கோவை பவானி மில்லில் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்டுக் கிடக்கிறது. இதனால் இங்கு பணி செய்யும் தாயகம் திரும்பியோர் வேலை இழந்து கஷ்டப் படுகின்றனர். அவர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும்.

சென்னை பல்லவன் போக்குவரத்து கழகத்தில் பணி செய்யும் தாயகம் திரும்பியோர் குறித்து மூன்றாவது முறையாக ஒரு மனுவை சங்கத்தலைவரிடம் சமர்ப்பித்தார் செல்வரத்தினம்.

## தலைவர் வாக்குறுதி

சார்பாளர்கள் தெரிவித்த பிரச்சனைகளுக்கும் - கருத்துகளுக்கும் வங்கித் தவலவர், நடராசன் ஐ ஏ எஸ் அவர்களுக்கும், நிர்வாக இயக்குனர் (கூடுதல் பணி) திரு குருமூர்த்தி ஐ.ஏ.எஸ். அவர்களும் விளக்கம் அளித்ததோடு மேற்படி பிரச்சனைகளுக்கு உடன் பரிகாரம் காண்பதாக உறுதிஅளித்தனர். ஈற்றில் திரு சபாபதி(சென்னை) சார்பாளர்கள் சார்பில் சில தீர்மானங்களைக் கொண்டு வந்தார். பேரவைக் கூட்டத்திற்கு வருகை தரும் டெலிகேட்டுகளுக்கு (கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகில்) தங்குவதற்கு ஒரு மண்டபத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த பேரவைக் கூட்டத்தை வேறு மாவட்ட தலைநகர்களிலும் வைக்க வேண்டும்.

அதிகபடியான கடன் உதவி வழங்கப்படும் நிறுவனங்களுக்கு வங்கி சார்பில் சார்பு அதிகாரி நியமிக்க வேண்டும்.

பேரவைக் கூட்டம் வருடம் ஒருமுறை நடக்கிறது. நேரத்தை அதிகப்படுத்த வேண்டும்.

சிறப்பு தீர்மானங்களை வங்கி ஏற்க வேண்டும்.

— இந்த தீர்மானங்களை அனைவரும் ஏக மனதாக ஏற்றுக் கொண்டனர். O

இலங்கை இனப் படுகொலையைக் கண்டித்து

# உண்ணாவிரதம் மேற்கொண்டனர்

திருச்சி கோட்டப்பட்டு முகாமில் 500க்கு மேற்பட்ட அகதிகள்-தாயகம் திரும்பியோர் 16-2-86ம் தேதி உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

1986ம் ஆண்டு மலையகத்தில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியினால் தொடர்ந்தும் இனப்படுகொலைகள் நடந்து வருவதை கண்டிக்கும் முகமாகவும், மலையக மக்களின் கோரிக்கைகளை இந்திய அரசுக்கு எடுத்துக் காட்டும் முகமாகவும் இந்த உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னாள் எம். பி. திரு. அனந்த நம்பியார் இந்த உண்ணாவிரதத்தை தொடக்கி வைத்தார்.

இந்த உண்ணா விரதத்தில் 200க்கு மேற்பட்ட பெண்களும் கலந்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகம் முழுவதும் தாயகம் திரும்பியோர் அகதிகள் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டுமென்று தா. தி. ஐக்கிய முன்னணி சம்மேளனம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து இந்த உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டதாக நமது நிருபர் தெரிவிக்கிறார்.

புதுக் கோட்டையிலும் மேற்படி சம்மேளனத்தின் பிரதிநிதி கதிரேசன் தலைமையில் உண்ணாவிரதம் மேற் கொள்ளப் பட்டது. O

Editor & Publisher: T.S. RAJU, Gangaiamman koil Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E. Colony 4thStreet, Madras-24.

Regd. No. R. N. 42556/83 Regd. No TN MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி:
1, தெற்கு கெங்கையம்மன் கோவில் 2வது தெரு,
சென்னை-600094

### தாயகம் திரும்பியோருக்கான கல்விச் சலுகை :

# காலக் கெடுவைத் தளர்த்திட வேண்டும் !

**தாயகம் திரும்பியோருக்காக அளிக்கப்படும் கல்விச் சலுகைகளைப்பெற இருக்கும் காலக் கெடுவை தளர்த்த வேண்டுமென்று குடிப் பெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூக நலக் சங்கம் மத்திய அரசு மறுவாழ்வுத்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளது.**

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியா திரும்பி குடியேறுகிறவர்களுக்கு பல்வேறுபட்ட சலுகைகள், உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சலுகைகள், உதவிகளில் கல்விக்கான சலுகைகளும் உதவிகளும் வழங்கப்படுகிறது- உதவித்தொகை, புத்தகங்கள், ஹாஸ்டல் வசதிகள், முன்னுரிமை, இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது

ஆயினும் இந்தியாவுக்கு வந்து சேர்ந்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் வரையே இந்த சலுகைகளும் உதவிகளும் பெறலாம். அதன்பின் 'தாயகம் திரும்பியோருக்கான இந்த சலுகைகள் உதவிகள் கிடைக்காது. பிறகு அவர்கள் உள்நாட்டு மக்களாகவே கணிக்கப்பட்டு, உள்நாட்டு மக்கள் பெறக்கூடிய சலுகைகள் உதவிகளே பெறத்தகுதி யுடையவர்களாக்கப்படுவர்.

ஆனால் ஐந்தாண்டு வரம்புக்குள் இந்த சலுகைகள், உதவிகளை தாயகம் திரும்பிய குழந்தைகள் - மாணவர்கள் பெறமுடியாதவர்களாக இருக்கக் காரணம் இந்த நாட்டுக்குத் திரும்பும்போது இருக்கும் குழந்தைகள் வளர்ந்து இந்த சலுகைகள், உதவிகளை பெறமுயலும் போது இந்த ஐந்தாண்டுகளை கடந்து விடுகிறார்கள்.

இந்த அய்ந்தாண்டு என்ற காலவரம்பு, குறிப்பாக உயர் கல்விப்படிப்புக்கு வேண்டிய சலுகைகளை உதவிகளை பெற முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. பட்டப்படிப்புக்கான புதுமுக வகுப்புகளிலும், தொழில், தொழில்நுட்பக் கல்வி வகுப்புகள், படிப்புகளிலும் இந்த சலுகைகளில் சேரக்கூடிய வாய்ப்பை இழக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மருத்துவம், பொறியியல், சட்டம், கால்நடை மருத்துவம், கலைக்கல்லூரி, பாலிடெக்னிக்ஸ் படிப்புக்கு தாயகம் திரும்பியோருக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களைப்பெற்று பயில முடியாத நிலையும் ஏற்படுகிறது. இதனால் அந்த இடங்கள் தாயகம் திரும்பியோர்களால் நிரப்பப்படாமலே போகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா வரும் 'தாயகம் திரும்பியோர்' பெரும்பான்மையோர் மலைத் தோட்டங்களிலிருந்து வரும் தொழிலாளர்கள். அங்கு இவர்களுக்குரிய கல்வி வசதிகள், சலுகைகள் குறைவு. அங்கிருந்து வரும் பிள்ளைகள் பெரும்பாலும் ஆரம்பக் கல்வியைக் கூட பூர்த்தி செய்யாதவர்கள் தான் இருக்கிறார்கள். நடுநிலைக் கல்வி உயர் நிலைக் கல்வியை எட்டிப் பிடிக்காதவர்களே அதிகம். இவர்கள் இங்கு வந்து தங்கள் படிப்பைத் தொடர்வது தங்களின் பெற்றோர்கள் அமைத்துக் கொள்ளும் மறுவாழ்வைப் பொறுத்துதான் இருக்கிறது.

இப்பெற்றோர் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்வதற்குள் பல வருடங்கள் ஆகிவிடுகிறது. அந்த காலக் கட்டத்தில் இங்கும் பல இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்வது கண்கூடாகஇருக்கிறது அவர்கள் ஒரு நிலையான மறுவாழ்வை அமைத்து இவர்களது குழந்தைகளின் படிப்பில் கவனம் செலுத்துவதற்குள் 'ஐந்து ஆண்டுகளுக்குள்' என்ற காலகெடு முடிந்து விடுகிறது. இதனால் தாயகம் திரும்பிய மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை இழக்கும் நிலை ஏற்படுகிறது.

பல்வேறுப்பட்ட முறைகேடுகளால், குறுக்கீடுகளால் இடர்பாடுகளால் அரசிடம் இருந்து மறுவாழ்வு உதவி கிடைப்பதிலும் மறு வாழ்வை அமைத்துக் கொள்வதிலும் இந்தக் காலக் கெடுவையே கடந்து விடுகிறார்கள். இந்த காலக் செடுவில் தாயகம் திரும்பியோர் தமது வாழ்வையும் சீர்படுத்திக் கொள்ள முடியவில்லை.

இந்த நாட்டிலேயே பிறந்து வளர்ந்து பரம்பரை பரம்பரை வாழும் மக்கள்கூட சாதியாலும் பொருளாதாரத்தாலும் முற்படுத்தப் பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், ஆதிவாசிகள் என்று பிரித்து வைக்கப்பட்டு சலுகைகள், உதவிகள் முன்னுரிமைகள் அளிக்கப்பட்டு வரும்போது, தாயகம் திரும்பிய மக்கள் ஐந்து ஆண்டுகளில் தங்களை மேம்படுத்திக்கொண்டுவிடுவார்கள் என்பது நிச்சயமில்லாதது.

எனவே இதுபோன்ற பல உண்மைகளை உணர்ந்து, மத்திய அரசு, மறுவாழ்வுத் துறை தாயகம் திரும்பியோருக்கு வைத்துள்ள இந்த காலவரம்பினை தளர்த்த வேண்டும் என்று குடியெர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூகநலச் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இச்சங்கம் மத்திய அரசை வற்புறுத்தி இருப்பதோடு, **மத்திய அரசை தமிழகத்திலுள்ள தாயகம்திரும்பியோர் மத்தியில்** பணி செய்யும் அனைத்து சங்கங்களும் வற்புறுத்த வேண்டும் என பல சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.